Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO.146/2021 Date: 17.10.2022
Deposition of witness for prosecution: PW 1 (LW 1 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜகோபால் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 17.10.2022 TIME 03.50 P.M.

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்டம் சிவராம்பேட்டையில் குடியிருந்து தற்போது கம்பத்தில் கம்பம் பார்ம் சென்டரில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் எனது நண்பர். 28.01.2021ம் தேதி மாலை 3.00 மணியளவில் நானும், புகார்தாரரும் கம்பம் - கே,கே.பட்டி ஆற்றுப்பாலம் அருகே பல்சர் பைக் எண். TN 60 AU 1688 பைக்கை நிறுத்திவிட்டு குளிக்கச் சென்று சுமார் 1 மணி நேரம் கழித்து வந்து பார்க்கும்போது பைக்கை நிறுத்தியிருந்த இடத்தில் காணவில்லை. நண்பர்கள் யாரும் எடுத்திருப்பார்கள் என்று சுமார் 15 நாட்கள் தேடிப் பார்த்தோம். அதன் பிறகு 11.02.2021ம் தேதி ராயப்பன்பட்டி காவல் நிலையத்தில் நானும், ஹரிஷ் மல்லையாவும் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து எனது நண்பர் ஹரிஷ் மல்லையா உடையதுதான். மேற்படி கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வேலைக்கு சென்றுவிட்டோம். மறுநாள் உத்தமபாளையம் காவல் நிலையத்தில் எங்கள் வண்டி கண்டுபிடித்திருப்பதாக கூறியதன் அடிப்படையில் அங்கு சென்று வண்டியை அடையாளம் செய்தோம். வண்டியை எடுத்த நபரையும் கைது செய்திருப்பதாக கூறினார்கள். காவல் நிலையத்தில் நாங்கள் சென்றபோது பைக்கை திருடியதாக இரண்டு நபர்களையும் பிடித்து வைத்திருந்தார்கள். அந்த நபர்கள் ஆஜர் எதிரிகள் தான். அதன்பிறகு

பைக்கை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு எனது நண்பரிடம் போலீசார் கூறினார்கள். நாங்கள் வந்துவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது கூறியுள்ளபடி தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையின்போது என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. உத்தமபாளையம் காவல் நிலையத்தில் செல்லும்போதும் கையெழுத்து போடவில்லை. கே கே பட்டிக்கு குளிக்க செல்லும்போது 3 நபர்கள் தனித்தனியான பைக்கில் சென்றோம் என்றால் சரிதான். அதை போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன். பைக்கை கம்பம் - கே கே பட்டி செல்லும் சாலையில் ஆற்றுக்கு தெற்கு பக்கத்தில் வண்டியை நிறுத்தினோம். 04.00 மணிக்கு திரும்ப வந்து பார்க்கும்போது எங்களது பைக் இருந்தது. நண்பர் பைக்கை மட்டும் காணவில்லை என்றால் சரிதான். புகார் காலதாமதமாக கொடுத்ததற்கு காரணம் நண்பர்கள் எடுத்திருக்கலாம் என்று தேடினோம். புகாரில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. புகார் கொடுக்க போகும்போது எங்களுடன் அருண்குமாரும் வந்திருந்தார். காணாமல் போன பைக்கின் ஆர்.சி.புத்தகம், இன்சூரன்ஸ் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. நாங்கள் புகார் கொடுக்க செல்லும்போது காலை 09.00 மணி இருக்கும். புகார் கொடுக்கும்போது ஆர்.சி. புத்தகம், இன்சூரன்ஸ் ஆவணம் போலீசில் எனது நண்பர் கொடுத்தாரா் என்றால் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் புகார்தாரர் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் பைக்கை திருடியதாக போலீசார் கூறியதால் தான் எதிரிகளை தெரியும் என்றால் சரிதான்.

**2, 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தொடர்பாக என்னை புகார் கொடுத்த அன்று மாலை ராயப்பன்பட்டி காவல் நிலையத்தில சார்பு ஆய்வாளர் அல்போன்ஸ் ராஜா அவர்கள் விசாரித்தார். அதன்பிறகு மறுநாள் உத்தமபாளையம் காவல் நிலையத்திலும் சார்பு ஆய்வாளர் அல்போன்ஸ் ராஜா அவர்கள் விசாரித்தார். நான் கூறிய விபரத்தை எழுதிக் கொண்டார். சார்பு ஆய்வாளர் காவல் நிலையத்தில் எந்த அறையில் இருந்தார் என்றால் தெரியவில்லை. காணாமல் போன பைக் பல்சர் என் எஸ் என்று போலீசாரிடம்

கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ராயப்பன்பட்டி காவல் நிலையத்திலிருந்து எனது நண்பருக்கு தான் போன் வந்தது. எஸ்.ஐ. பேசியதாக என்னிடம் கூறினார். என்னிடம் காவல் நிலையத்தில் அடையாளம் காட்டிய நபர்கள் பெயர், விலாசம் தெரியாது என்றால் சரியல்ல. பெயர் கௌதம், சரவணக்குமார் என்று கூறினார்கள். எந்த நபர் கௌதம், சரவணக்குமார் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது நான் இருந்ததாக கூறுவதற்கு எழுத்து மூலமான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் புள்ளி விபரக் கணக்கிற்காக போலீசார் போட்ட பொய்யான வழக்கிற்காக போலீசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூன்று வாகனங்களில் தனித்தனியாக போனோம் என்பதை சார்பு ஆய்வாளர் விசாரித்து கைப்பட எழுதிக் கொண்டார் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN

Digitally signed by A RAMANATHAN
Date: 2022.10.15 19:21:10 +0530

நீதித்துறை நடுவர்,

உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO.146/2021 Date: 17.10.2022
Deposition of witness for prosecution: PW 2 (LW 4 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ஜோன்ஸ் சாமுவேல் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 17.10.2022 TIME 04.20 P.M.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சிதம்பரத்தில் M.B.A., படிப்பு படித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.02.2021 ம் தேதி காலை 10.00 – 10.15 மணியளவில் நான், எனது நண்பர்கள் ஹரிஷ் மல்லையா, சுதர்ஷன், கே.கே.பட்டி ஆற்றுப்பாலம் அருகிலிருந்தபோது ராயப்பன்பட்டி காவல் நிலைய போலீசார் பைக் திருடு போனது சம்மந்தமாக விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், சுதர்ஷனும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் கையெழுத்து வாங்கிய ஆவணம் என்ன குற்ற எண், என்ன வழக்கு என்று எனக்கு தெரியுமா என்றால் வண்டி தொலைந்ததற்காக என்று கூறினார்கள். கே கே பட்டி சாலையிலுள்ள பாலத்திற்கு இடது புறமாகத் தான் வரைபடம் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள். மேற்படி இடத்தில் எனக்கு வீடு, வயல் கிடையாது என்றால் சரிதான். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு அவருக்கு ஆதரவாக சம்பவ இடத்தில் கையெழுத்து

செய்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ராயப்பன்பட்டி காவல் நிலையம் சம்பவ இடத்திலிருந்து 6 கி.மீ. இருக்கும். பாலத்திற்கு எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

**2,3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN

Digitally signed by A RAMANATHAN
Date: 2022.10.15 19:21:38 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO.146/2021 Date: 17.10.2022
Deposition of witness for prosecution: PW 3 (LW 5 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சுதர்ஷன் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 17.10.2022 TIME 04.30 P.M.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருப்பத்தூர் குரிசிலாபட்டில் குடியிருந்து சிதம்பரத்தில் M.B.A., படிப்பு படித்து வருகிறேன். என்னிடம் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.02.2021 ம் தேதி காலை 10.00 – 10.15 மணியளவில் நான், எனது நண்பர்கள் ஹரிஷ் மல்லையா, ஜோன்ஸ் சாமுவேல் கே.கே.பட்டி ஆற்றுப்பாலம் அருகிலிருந்தபோது ராயப்பன்பட்டி காவல் நிலைய போலீசார் பைக் திருடு போனது சம்மந்தமாக விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், ஜோன்ஸ் சாமுவேலும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் கையெழுத்து வாங்கிய ஆவணம் என்ன குற்ற எண், என்ன வழக்கு என்று எனக்கு தெரியுமா என்றால் வண்டி தொலைந்ததற்காக என்று கூறினார்கள். கே கே பட்டி சாலையிலுள்ள பாலத்திற்கு இடது புறமாகத் தான் வரைபடம் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள். மேற்படி இடத்தில் எனக்கு வீடு, வயல் கிடையாது என்றால் சரிதான். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து

கையெழுத்து செய்துவிட்டு அவருக்கு ஆதரவாக சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ராயப்பன்பட்டி காவல் நிலையம் சம்பவ இடத்திலிருந்து 6 கி.மீ. இருக்கும். பாலத்திற்கு எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

**2,3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN
Digitally signed by A RAMANATHAN
Date: 2022.10.15 19:21:45 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.